**இஸ்ரேல் முன்னாள் பிரதமர் திரு ஏரியல் ஷரோனின் மறைவிற்கு பிரதமர் இரங்கல்**

ஜனவரி 12, 2014

இஸ்ரேல் நாட்டின் முன்னாள் பிரதமர் திரு ஏரியல் ஷரோன் மறைவு குறித்து பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, இஸ்ரேல் பிரதமர் திரு பென்ஜமின் நேதன்யாகுவிற்கு அவர் அனுப்பிய இரங்கல் செய்தியில் குறிப்பிட்டு இருப்பதாவது-

திரு ஏரியல் ஷரோன் மறைவு குறித்து அறிந்ததும் நான் ஆழ்ந்த துயரமுற்றேன்.

பொதுச்சேவையில் அவர் நீண்ட காலம் தொண்டாற்றியபோது இஸ்ரேலுக்காக பல முக்கிய பங்களிப்புகளை வழங்கியுள்ளார். பிரதமராக அவர் இப்பிராந்தியத்தின் அமைதிக்காக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந்தியாவைப் பொறுத்தவரை, இந்தியாவிற்கு வந்த முதலாவது இஸ்ரேலிய பிரதமர் அவர் தான். 2003 செப்டம்பரில் அவர் இந்தியா வந்தார். நமது இருதரப்பு உறவுகளை மேம்படுத்த அவர் வழங்கிய பங்களிப்புகள் நீண்டகாலம் நினைவில் வைத்திருக்கப்படும்.

அவரை இழந்து துயருரும் இந்த தருணத்தில் எங்களது இதயபூர்வமான இரங்கல்களையும் அனுதாபங்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

எனது இந்த இரங்கலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுமாரு கேட்டுக்கொள்கிறேன்.

**புது தில்லி**
**ஜனவரி 12, 2014**